Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 66 என் நீதியின் தேவனே, ... நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும் சங்.4:1 டிசம்பர் 2020 No.12

ஆவியின் நிறைவு

The fullness of the spirit

F.B. Meyer

"ஆவியினால் நிறைந்தது....." **எபேசி. 5:18.**

தனிப்பட்ட வாழ்விலோ, சபை வாழ்விலோ தூய ஆவியானவர் குறைவு பட்டிருந்தால் அதனை ஈடு செய்வது அரிது. மின் உற்பத்திக்காக பயன்படுத் தப்படும் சக்கரத்திற்கு நிரம்பிவழியும் நீரோட்டம் தேவையாயிருப்பது போல தனிவாழ்விலும், சபை வாழ்விலும் ஆவியானவரின் நிறைவு இன்றியமை யாதது. ஒரு சரீரத்திற்கு உயிர் எத்தனை முக்கியம் வாய்ந்ததோ அது போலவே ஆவிக்குரிய வாழ்வில் தனிநபர்களுக்கு ஆவியானவர் தேவை. ஆவியானவர் எப்படிப்பட்டவர் என்பதையும், தமது பக்தர்களின் இருதயத்தில் எவ்வாறு அன்பு, வல்லமை ஆகியவற்றின் பிரளய மாய் செயல்படுகிறார் என்பதையும் நாம் கற்றுக் கொள்ளாவிடில், நமது துன்ப வேளைகளிலும், எதிரிகள் முன்பாகவும் வல்லமையற்றவர்களாகவும், வெட்கப் பட்டவர்களாகவும் நிற்க ஏதுவாகும்.

இதை வாசிக்கிற உங்களில் பலர், தூய ஆவியானவர் உங்களில் குறைவு பட்டிருப்பதால் வெவ்வேறு வகையான ஆவிக்குரிய பலவீனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆவியானவர் இல்லாமலில்லை, ஆனால் உங்களில் அவர் ஒரு நூலிழை போன்றோ, வெள்ளிக்கோடு போன்றோ, ஆழமற்ற நீரோடை போலவோ இருக்கிறார். இதனால் திருப்தியடையலாகாது. பெந்தெகொஸ்தே நாளின் நிறைவு, வல்லமையால் நிரப்பப்படுதல், அக்கினியின் ஸ்நானம் ஆகியவை நம் கையெட்டும்தூரத்தில் உள்ளன. தேவன் நமக்களிக்கவிருக்கும் இந்நன்மைகளைப் பெற்றுக் கொள்ள பரிசுத்தமான ஆவல் நம்மில் தூண்டப்படுவதாக.

நமது ஆண்டவராகிய இயேசு வின் ஊழியத்தில் ஆவியின் வல்லமை வெளிப்பட்டதை வேதவசனங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன. அவர் பிறக்கும் போதே ஆவியால் நிரப்பப்பட்டிருந்தும் இந்த அனுபவம் தொடர்பாக அவரில் காணப்பட்டது. "இயேசு பரிசுத்த ஆவியி னாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப் பட்டார் **லூக்.4:1.** "பின்பு இயேசு ஆவி யானவருடைய பலத்தினாலே கலிலேயா வுக்குத் திரும்பிப் போனார்" **லூக்.4:11.** அங்கே தமது சொந்த ஊர் நாசரேத்தி லே எழுந்து நின்று "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்" என்ற தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தியதை 18-ம் வசனம் கூறுகிறது. அவரது அற்புத மான வார்த்தைகளும், செயல்களும் அவரது மானிட வாழ்வில் தூய ஆவியான வரின் வெளிப்பாடாயிருந்தன **அப்.10:38.**

நீங்கள் குறைவுபடுகிறீர்களா?

பாவத்தின்மேல் வெற்றி பெறுவ தில் குறைவுபடுகிறீர்களா? தூய ஆவி யானவரை உதாசீனம் பண்ணியதால் ஏற்பட்ட விளைவே இது. மாம்சம் எழும்பி செயல்படுவதற்கும், அது நம்மை ஆண்டுகொள்வதற்கும் மாற்று மருந்து ஆவியானவர் மட்டுமே. அவர் மாம்ச இச்சைகளுக்கு எதிரானவர் **கலா.5:17.** அவர் நமது இருதயத்தை நிரப்பும்போது சோதனைக்குரிய எண்ணங்கள் தவிர்க் கப்படுகின்றன. தூய ஆவியானவருக்கு எதிராக பாவம் நிற்கமுடியாது. சூரியனது காலை ஒளிக் கதிர்களால் உலகின் இருள் மறைவதுபோல் பாவம் மறைந்துவிடும்.

ஆவியானவர் துக்கப்படுத்தப் படவோ, தடுக்கப்படவோ, அணைக்கப் படவோ நேரிட்டால் அது கடினமான அனுபவமாயிருக்கும் "கிறிஸ்து இயேசு வினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" **ரோமர் 8:2.**

தூய்மையின் கனிகள் உங்களில் குறைவுபடுகிறதா? ஆவியால் நிரப்பப் பட்டவர்களின் வாழ்வில் நீதியின் கனிகள் நிரம்பி அவர்கள் தேவனைத் துதிக்க ஏதுவாகின்றன. அவர்கள் முகங்கள் தேவபிரசன்னத்தால் பிர காசிக்கும். துக்கப்பாத்திரத்தை அவர்கள் குடித்தாலும் அவர்கள் முகத்தில் அது வெளிப்படுவதில்லை. அவர்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களும் பழகுவதற்கு இனிமையானவர்களுமாயிருப்பர். சுயநலம் அவர்களில் காணப்படுவ தில்லை. சிறுபிள்ளைகளை போன்ற அவர்களது தாழ்மை மக்களைக் கவர்ந்து கொள்ளக்கூடியது. இத்தகைய கிருபை யை நாம் இழந்து நிற்கிறோம். எனவே மக்களை நாம் கவர்ந்து கொள்ள முடிய வில்லை. மாறாக அவர்கள் நம்மைவிட்டு ஒதுங்கிச் செல்லுகிறார்கள். வாழ்வாகிய நமது கிளைகளில் கனிகளில்லாதபடி வெட்டுகிளிகள் வெறுமையாக்கிவிட்டன. காரணம் நமது உள்ளான வாழ்வில் ஆவியானவருக்கு இடமில்லை. ஆவி யானவராகிய சாரம் நம்மிலிருந்தால் மட்டுமே நம்மில் திரளான கனிகள் வெளிப்பட முடியும்.

சேவை செய்யும் வல்லமையில் குறைவுபடுகிறீர்களா? பிறர் இரட்சிக்கப் பட வேண்டும் என்ற தாகம் உங்களில் இல்லையா? ஆத்துமாக்களைக் குறித்த அக்கரையற்றவர்களாக, அவர்கள் தேவனைவிட்டு விலகிச் செல்லும்போது, வியாகுலமற்று காணப்படுகிறீர்களா? உங்கள் வார்த்தைகளில் வல்லமை இல்லை. சாத்தானைத் துரத்தும் உங்கள் முயற்சியை அவன் பகடி பண்ணுகிறான். தூங்குகிற நீங்கள் ஒரு நிமிடம் எழும்பி விட்டு, மறுபடியும் ஆழ்ந்த நித்திரை செய்கிறீர்கள். ஊழியம் விரிவடைய வில்லை. கனிகளால் கூடை நிரம்ப வில்லை. "பரிசுத்த ஆவி, உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப் பீர்கள்" **அப்.1:8** என்பது வாக்குத்தத்தம். ஆதி கிறிஸ்தவர்கள் ஆவியால் நிரப்பப் பட்டபோதுதான் தைரியமடைந்து, தேவ வசனத்தைப் போதிக்கவும், ஆண்ட வராகிய இயேசுவின் உயிர்த்தெழு தலைக் குறித்துப் பலமாக சாட்சி கூறவும் முடிந்தது.

ஆவியின் நிறைவை வாஞ்சியுங்கள்

ஆவியால் நிரப்பப்பட்டால் மேற்கூறிய குறைவுகளும் மற்றும் பல குறைவுகளும் நீங்கப்படும். சந்தோஷ மும் வல்லமையும், ஆண்டவர் நம்மில் வாழும் உணர்வும் ஏற்பட ஆவியால் நிரப்பப்படுவதைத் தவிர வேறெதிலும் திருப்தியடையக்கூடாது.

'ஆவியால் நிரம்பி இருங்கள்' என்பது ஒரு நேர்மறையான கட்டளை. நமது நன்மைக்காக இதற்குக் கீழ்படிவது அவசியம். இக்கட்டளைக்கு அப்படியே கீழ்ப்படிய வேண்டும். ஆவியின் நிறை வைப் பெற்று பேசிய அப்போஸ்தல னாகிய பேதுருவைக் கவனித்துக் கொண்டிருந்த மக்கள் பரத்துக்கேறிய ஆண்டவரின் வல்லமையால் நிரப்பப் பட்டனர். முன்பு கூறப்பட்ட வாக்குத் தத்தம் நிறைவேறியது. இந்த ஆசீர்வாதம் அவர்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக் கும் மாத்திரமல்ல, கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உரியது

(3-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவிப்பு

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்

மொபைல் : 95432 21008

வாட்ஸ்ஆப் : 94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

அவர் துதிக்குப் பாத்திரர்

கர்த்தரை அறியாத ஓர் இளம் வாலிபன் ஓர் ஓட்டலில் உணவருந்த அமர்ந்தபோது, நான்கு பேர் தலைகுனிந்து அமர்ந்திருப் பதைக் கண்டான், ஆச்சரியப்பட்டான்! சற்று நேரம் சென்று "சார்! நீங்கள் தலைகுனிந்து சிறிதுநேரம் அமர்ந்து இருந்தீர்கள், ஏதாவது கவலையா?" என ஆவலுடன் கேட்டான். அவர்கள், "தம்பி, நாங்கள் ஆகாரத்திற்காக ஜீவனுள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சந்தோஷமாக நன்றி கூறினோம்" என அன்புடன் பதிலளித்தனர். அன்று அவ்வாலிபன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணித்தான். இன்று தேவகிருபையால் கர்த்தரின் ஊழியக்காரனாக திருப்பணி செய்கிறான்.

வாக்குத்தத்தம்

"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" எரேமியா 32:27.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2020 டிசம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். கர்த்தருக்குச் சித்தமானால் இன்னமும் 30 நாட்களில் **2020** நம்மைவிட்டு கடந்து போகும். **"நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித் தருளும்"** என்று ஜெபிப்போமாக சங்கீதம் 90:12.

முதலாவது 3 வேத பகுதியையும், பின்பு 3 தலைப் பிட்ட காரியங்களையும் தேவ கிருபையால், தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு, தேவ ஒத்தாசையால் எழுதுகிறேன்.

1. அதற்கு இயேசு : நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்ப மாட்டீர்கள் என்றார் லூக்கா 22:67.

லூக்கா 3:21, 22 ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது.

பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப் போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி : நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமா யிருக்கிறேன் என்று உரைத்தது.

யோவான் 1:29 மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு : இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி ..... என்றான்.

2 பேதுரு 1:16-18 நாங்கள் தந்திரமான கட்டுக்கதை களைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்து வத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்.

இவர் என்னுடைய நேசகுமாரன் இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்ற போது,

அவரோடே கூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக் கையில், வானத்திலிருந்து பிறந்த அந்த சத்தத்தைக் கேட்டோம்.

(மத்தேயு 17:5; மாற்கு 9:7; லூக்கா 9:35 பார்க்க)

ஆனால் அன்றைய பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் அவரை நம்பவில்லை; எனவே பேதுரு பதினொரு பேரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினா ரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்" அப்.2:14-36.

2. அப்பொழுது பிலாத்து ஜனங்களை பிரியப்படுத்த மனதுள்ள வனாய், ... இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான் மாற்கு 15:15.

பிலாத்து நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி : நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள் மத்தேயு 27:19.

கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தி னாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்ற வன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான் மத்தேயு 27:24.

3. கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; .... இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தார் மத்தேயு 7:15, 28.

அநேகக் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள் மத்தேயு 24:11.

ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசி களும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் மத்தேயு 24:24.

"ஆதலால் கர்த்தர் பொய்யின ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளை யிட்டார்" என்று நான் எழுதவில்லை, என் தேவனுடைய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. இந்த அருமையான சத்தியத் தை அறிய ஆவலுள்ளவர்கள் 1 இராஜாக்கள் 22:1-37 வரையுள்ள வசனங்களை வாசியுங்கள்.

அதற்கு மாறாக, உண்மையான தீர்க்கதரிசி கூறுவதைக் கேளுங்கள் : **"அதற்கு மிகாயா : கர்த்தர் என்னிடத்தில் சொல்வதை யே சொல்லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்"** 1 இராஜா.22:14.

(5-ம் பக்கம் பார்க்க)

❖ **வருகையின் தூதன்** ஊழியங்களுக்காக தினந்தோறும் ஜெபியுங்கள்,மாதந்தோறும் தாங்குங்கள்.

❖ **வருகையின் தூதன்** ஊழியங்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்புவோர் குறைந்த பட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

● **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்பவேண்டியமுகவரி
வருகையின் தூதன், நியூபோர்ட்தெரு,நாகர்கோவில்-629001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com

● **காசோலை** *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.

● **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் (Net Banking) தயவாய் உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் **95432 21008** வழியாக தெரிவி யுங்கள்.

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
United Bank of India, Mead Street, Ngl-1 IFSC Code : **UTBI0NGLP05**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Syndicate Bank, W.C.C. Road, Ngl-1 IFSC Code : **SYNB0006182**

(1-ம் பக்க தொடர்ச்சி)

அப்.2:39. நீங்கள் இவ்வாறு அழைக்கப் பட்டவர்களில் ஒருவரா? அப்படி யானால் இந்த நிறைவு உங்களுக்கும் உரியது என்று விசுவாசியுங்கள். அப்போது உடன்படிக்கையின் பங்கை சுதந்தரித்துக் கொள்வீர்கள்.

இது எனக்குத் தேவையில்லை என்பவர்கள் இதனைப் பெற்றுக் கொள்ளவே முடியாது. இது ஒரு விலையேறப்பெற்ற பரிசு. இதை சொந்தமாக்கிக் கொள்ள நிர்விசாரமா யிருப்பவர்களுக்கு அளிக்க பிதா விரும்பு வதில்லை. இந்த விருப்பத்தின் ஜ்வலை மங்கி எரிந்தால் ஆவியின் நிறைவு ஏற்படுவதில்லை. எனவே ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்ற வாஞ்சை தூண்டி எழுப்பப்பட வேண்டும்.

ஆவியால் நிரப்பப்படுவதைக் குறித்து உற்சாகமூட்டும் பகுதி வேதபுத்த கத்தில் அப்போஸ்தலர் நடபடிகளில் காணப்படுகிறது. முதல் முதலாக இந்த அனுபவத்தைப் பெற்றவர்களின் வாழ்வு நம்மை மெய் மறக்கச் செய்யும். அவர் களில் கோழைகள் தைரியசாலிகளாக மாறினர். எளிதில் இடறியவர்கள் எஜமானுடைய திட்டத்தை நிறை வேற்றுவதில் விழிப்படைந்தனர். உலகப் பதவிகளுக்கான எண்ணங் கொண்டி ருந்தவர்கள் மற்றவர்களைத் தங்களை விட மேன்மையுள்ளவர்களாகக் கருத வும், தாழ்மையுடன் தேவபணி செய்ய வும் தங்களை அர்ப்பணித்தனர். அவர் களது வார்த்தைகளில் வெளிப்பட்ட வல்லமையால் மக்கள் கூட்டம் கூட்ட மாக சபையில் சேர்க்கப்பட்டனர். கிறிஸ்துவைக் கொலை செய்தவர்கள் அவரை ஆராதிக்கிறவர்களாகவும், நண்பர்களாகவும் மாறிவிட்டனர். அப் போஸ்தலர் கூறிய எளிமையும் பேச்சு வன்மையும் நிறைந்த சத்தியத்தை எந்தத் திறமையான சங்கத்தினராலும் மறுக்க முடியவில்லை. பட்டணங்களும் நாடு களும் அசைக்கப்பட்டன. கல்வியறிவற்ற வர்களாயிருந்தாலும் அவர்களது உற்சாக மான பிரசங்கங்கள் சிலுவையை எடுத்துக் கூறியபோது ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்ப அது ஏதுவாயிருந்தது.

அனைவருக்கும் சொந்தமான பொக்கிஷமாகிய ஆவியின் நிறைவால் நடைபெற்ற பெரிய காரியங்கள் ஏன் நம் மத்தியில் நடைபெறக்கூடாது? அதற் கான ஒரு பேராவல் நம்மில் ஏற்பட்டு பெரிய விளைவுகளையும் நாம் அடைய வேண்டும்.

வேதவாக்கியத்தில் காணப்படும் வாக்குத்தத்தங்கள் நம்மைத் தூண்டி எழுப்புவதற்குப் போதுமானவைகளா யிருக்கின்றன. யோவா.7:38-39; மாற்.13:11; யோவா.14:26; 2 கொரி.3:18; அப்.1:8 ஆகிய வசனங்களைப் படிப்போம்.

மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் சக்கரத்திற்கு நிரம்பிவழியும் நீரோட்டம் தேவையாயிருப்பது போல தனிவாழ்விலும், சபை வாழ்விலும் ஆவியானவரின் நிறைவு இன்றியமையாதது.

சரியான நோக்கம்

சுயநலத்திற்காகவோ, மக்களைக் கவர்ந்து கொள்ளவோ, கஷ்டங்களைப் படிக்கற்களாக மாற்றுவதற்காகவோ ஆவியின் நிறைவை எதிர்பார்க்கலாகாது. உங்கள் சரீரத்தின் மூலமாக வாழ்விலும் சாவிலும் ஆண்டவராகிய இயேசுவை மகிமைப்படுத்துவதே நமது ஒரே நோக்கமாயிருக்க வேண்டும். கீழ்த்தர மான நோக்கங்களெல்லாம் அழிந்து ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்ற மேலான நோக்கம் தெளிவாகவும் பெலமாகவும் பற்றியெரிய வேண்டும்.

பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எந்த நன்மையும் செய்வதில்லை. எனவே பேர், புகழ், சொகுசு, சுயதிருப்தி யான வாழ்வு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டவர்களுக்கு தேவன் தமது ஆவியானவரை அனுப்புவதில்லை.

நாம் நமது சுய சந்தோஷத்திற் காகவோ, சொகுசான வாழ்வுக்காகவோ ஆவியானவரைத் தேடினால் பெற்றுக் கொள்ளமாட்டோம். ஆண்டவராகிய இயேசு மகிமைப்பட வேண்டும் என்ற ஒரே வாஞ்சையை ஆவியானவர் எதிர் பார்க்கிறார். இந்த நோக்கமுடையவர் களில் மட்டுமே அவர் வாசம் செய்ய முடி யும். மக்கள் உங்களிடமிருந்து ஆண்ட வரிடம் திரும்ப வேண்டும் என்று யோவான் ஸ்நாபகனைப் போல எண்ண வேண்டும். அப்போது சந்தோஷமடை வீர்கள். ஏனெனில் நீங்கள் ஆசீர்வாதத் திற்கு அருகில் வந்துவிட்டீர்கள். இல்லா விட்டால் உங்களைப் பரிசுத்தப்படுத்தி, அவர் உங்களுக்குள் பிரவேசிக்க உதவி செய்யும்படி அவரிடம் உங்களை ஒப்பு வியுங்கள். நீங்கள் தேடுகிற ஆண்டவர் இரக்கமாக அவருடைய ஆலயமாகிய உங்களில் பிரவேசிப்பார்.

வேதவசனத்தை உதாசீனம் செய்ய வேண்டாம்

சிலர் தங்களிலுள்ள உள்ளான ஒளியையும், தூய ஆவியானவரின் நடத்துதலையும் மிகைப்படுத்தி, தேவன் தந்த அவரது வசனத்தை உதாசீனம் பண்ணுவதால், வசனம் இன்றும் நம் இருதயங்களில் கிரியை செய்வதை மறந்துவிடுகிறார்கள்.

தூய ஆவியால் திருப்தியடைந்து வசனத்தை விட்டுவிடவோ, வசனத்தால் திருப்தியடைந்து தூய ஆவியானவரை விட்டுவிடவோ கூடாது. இரயில் வண்டி யானது இணைப்போக்கான தடத்தில் செல்வது போல, வசனமும் தூய ஆவி யானவரும் பயன்படுத்தப்பட வேண் டும். ஆவியானவரின் தெரிந்து கொள்ளப் பட்ட கருவி வேதவசனம். வேதவசனத் தோடுள்ள நெருங்கிய உறவால் மட்டுமே ஆவியானவரின் மெல்லிய குரலைக் கேட்க முடியும். வேதவசனத்தின் மூலமா கவே ஆவியானவர் நம் இருதயங்களில் பிரவேசிக்கமுடியும். சூரிய ஒளிக்கதிர்கள் வீடுகளின் அறைகளை வெப்பப்படுத்து வதற்கு இதை ஒப்பிடலாம்.

வேதத்தை விரிவாகக் கற்றுக் கொள்ளும் எழுப்புதல் அவசியமாயிருக் கிறது. வேதவாக்கியங்களாகிய சுரங்கம் கண்டுபிடிக்கப்படுவதற்காகக் காத்திருக் கிறது. இந்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்து வசனங்களைப் புரிந்து கொள்ள கடின முயற்சி செய்வோம். அப்போது தாங்கள் தேடுகிற நிரப்பப்படும் அனுபவத்தைப் பெற முடியும்.

உங்கள் அறையிலோ தோட்டத் திலோ வேதபுத்தகத்துடன் முன்னும் பின்னுமாக நடந்து கொண்டே அதிலுள்ள கருத்துக்களையும் வாக்குத் தத்தங்களையும் ஜெபத்தோடு தியானிப் பதின் மூலம் தேவனோடு உறவாடலாம். ஏதேன் தோட்டத்தில் தேவன் ஆதாம் ஏவாளோடு உலாவினது போன்ற உறவைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

தூய ஆவியானவருக்கு உங்களை ஒப்புவியுங்கள்

தூய ஆவியானவர் நம்மில் வாசம் செய்கிறவர், அவர் மூலமாகக் கிறிஸ்து நம்மிலிருக்கிறார். அவர் ஆவியாக நம்மிலிருக்கிறார். தண்ணீரானது தான் இருக்கும் பாத்திரத்திற்குள் அடங்கி யிருப்பது போல நாம் நம்மை அவருக்கு ஒப்புவிக்க வேண்டும். இது எளிதான தல்ல. நாம் இடைவிடாமல் நம்மை நிதானித்து நமது சுயவாழ்வை மரணத் துக்கு ஒப்புவிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவை நமக்குப் பதிலாளியாக தெரிந்து வைத்திருக்கி றோம். ஆனால் தூய ஆவியானவரை நமது ஜீவனாகத் தெரிந்து கொண்டிருக்கி றோமா? அப்போஸ்தலனாகிய பவுலைப் போல, "இனி நானல்ல கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார்" என்று சொல்ல முடியுமா? கலா.2:20. அப்படி யானால் அதிலடங்கிய யாவற்றிற்கும் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். பழைய வாழ்வை ஒழித்துவிட்டு புதுவாழ்வில் வளர விருப்பம் வேண்டும். ஒன்று பெருகவும் மற்றது சிறுகவும் இடமளிக்கவும் வேண்டும். இது மாம்சத் திற்கு வேதனையளிக்கும் ஒரு பதனிடுத லாகும். நியாயத்தீர்ப்பு, குற்றப்படுத்து தல், சிலுவையிலறைதல் போன்ற அனுப வங்களுக்கு நாமே நம்மை விழிப்புடன் ஒப்புவித்து, அவற்றை விரைவுபடுத்த வேண்டும். எந்தக் கஷ்டத்திலும் தூய ஆவியானவரின் கட்டளைக்குக் காண் பிக்கும் பய பக்தியில் உத்தமமாயிருக்க வேண்டும்.

தூய ஆவியானவர் நம்மை நிரப்பிக் கொண்டேயிருக்க, நாம் எல்லாவற்றிலும் எப்போதும் கீழ்ப்படி கிறவர்களாயிருக்க வேண்டும். இந்த வாழ்வில் ஒரு சிறிய கட்டளையையும் உதாசீனம் செய்வதால் ஒரு ஆத்துமா ஒளி நிறைந்த வட்டத்தைவிட்டு வெகுவிரை வாக கிருபையால் பெற்ற ஆவிக்குரிய வல்லமையை இழந்துவிடக்கூடும். ஒரு பார்வை, ஒரு வார்த்தை, ஒரு மறுப்பு போன்றவற்றால் அவரை நம்மில் துக்கப்படுத்தவும், பிறரில் தணித்துப் போடவும் கூடும். கிரயத்தை எண்ணிப்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

பார்த்து தயங்க வேண்டாம். அவர் அன்பின் ஆவியானவர். அவர் நம்மை அதிகமாக நேசிப்பதால் தகுந்த காரணத்தால் மட்டுமே துக்கப்படுவார். அவர் நம்மை அறிந்திருப்பது போல நாமும் அவரை அறிந்து நடந்து கொள்ள வேண்டும்.

விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளுங்கள்

"ஆகையால் நீங்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட படியே ..... அவருக்குள் நடந்து கொண்டு" **கொலோ.2:6**. தெய்வீகக் குடும்பத்தின் ஒரு முக்கிய சட்டம் விசுவாசம். நீங்கள் பாவமன்னிப்பையும் இரட்சிப்பையும் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக் கொண்டிருந்தால் தூய ஆவியானவரையும் விசுவாசத்துடன் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

இதுவரை சொல்லப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுங்கள். பின்பு அமைதியாக விசுவாசத்தோடு தேவனுக்கு முன்பாக ஜெபத்தில் காத்திருங்கள். கேட்கிறவர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார் **லூக்.11:15**. பயபக்தியுடன் இந்த மகிமையான ஈவினை சொந்தமாக்கிக் கொண்டு முழங்காலிலிருந்து எழும்பலாம். தேவன் தமது வார்த்தையில் உண்மையுள்ளவர். எனவே அவர் உங்களை நிரப்பிவிட்டார். ஆயினும் ஒவ்வொரு நாளும் அவர் மீது நம்பிக்கை வைத்து நிரப்பப்படுங்கள். உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்கு ஆகக்கடவது.

முதலாவது காற்றின் சத்தம் கேட்காமலிருக்கலாம். பிளவுபட்ட அக்கினிமயமான நாவுகளும் தோன்றாமலிருக்கலாம். அவரது பிரசன்னத்தையும் நீங்கள் உணராமலிருக்கலாம். இவை தான் அடையாளம் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் நிரப்பப்பட்டுவிட்டதை விசுவாசியுங்கள். தேவனே உமக்கு நன்றி. உமது வார்த்தையை நீர் என்னிடம் காத்துக் கொண்டீர். நான் என் வாயைத் திறந்தேன், நீர் அதை நிரப்பிவிட்டீர். நான் ஒரு விசேஷித்த மாறுதலையும் உணரவில்லை என்று மறுபடியும் மறுபடியும் சொல்லுங்கள். மிகுந்த சந்தோஷத்தால் களிகூருவீர்கள். ஆவியின் கனி உங்களிலிருந்து திரளாய்ப் பிறப்பிக்கப்படும்.

ஒருமுறை நிரப்பப்படுவது போதாது. மறுபடியும் மறுபடியும் நிரப்பப்படவேண்டும். அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் மீண்டும் 4-ம் அதிகாரத்திலும் நிரப்பப்படுவதை வாசிக்கிறோம். காலையில் வீட்டைவிட்டு வெளியே செல்லுவதற்கு முன்பு தூய ஆவியானவரைத் தேடி நாடி நிரப்பப்படுவது ஆசீர்வாதமான அனுபவம்.

தனிப்பட்ட வாழ்விலோ, சபை வாழ்விலோ தூய ஆவியானவர் குறைவுப்பட்டிருந்தால் அதனை ஈடு செய்வது அரிது.

நம்மிலிருக்கும் ஆவியானவர்

The Spirit in us

Horatius Bonar (1808-1889)

தேவன் தூய ஆவியானவரை இலவசமாகவும் தாராளமாகவும் நமக்கு அளிக்கிறார். நாம் பெற்றுக் கொள்வதைக் குறித்து **எபேசி 4:7** இப்படி விளக்குகிறது: "கிறிஸ்துவின் ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது". ஆரம்பகால தேவ பிள்ளைகளைக் குறித்து : "சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்" **அப்.13:52** என்று படிக்கிறோம். நாமும் ஆவியால் நிரப்பப்படுவது அவசியம் **எபே.5:18**. ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் தாமே நம்மைநிரப்புகிறார் **ரோமர் 5:5**.

அவர் இறங்கினார் என்று **அப்.11:15**-லும், பொழியப்பட்டார் என்று **அப்.2:33**-லும் ஊற்றப்படுவார் என்று **எசேக்.39:29**-லும், ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று **அப்.11:16**-லும் படிக்கிறோம்.

அவர் நமது சுதந்தரத்தின் அச்சாரம் **எபே.1:14**. அவர் நம்மை முத்திரை போட்டிருக்கிறார் **எபே.1:13**. அவர் நம்மைப் போதிக்கிறவர் **1கொரி.2:13**, அவர் வெளிப்படுத்துகிறவர் **1 கொரி.2:10**; அவர் கண்டித்து உணர்த்துவார் **யோவா.16:8**. வல்லமையால் பலப்படுத்துகிறவர் என்று **எபேசி 3:16**-லும் நம்மைக் கனிகொடுக்கச் செய்கிறவர் என்று **கலா.5:22**-லும் படிக்கிறோம். அவர் ஆராய்ந்தறிகிறவர் **1 கொரி.2:10**. அவர் போராடுகிறவர் **ஆதி.6:3**; கழுகிப் பரிசுத்தப்படுத்துகிறவர் **1 கொரி.6:11**. நடத்துகிறவர் **ரோமர் 8:14**; **சங்.143:10**; தேற்றரவாளன் **யோவான் 14:26**; தேவ அன்பை நம்மில் ஊற்றுகிறவர் **ரோமர் 5:5** அவர் புதிதாக்குகிறவர் **தீத்து 3:5**.

அவர் தூய்மையின் ஆவியானவர் **ரோமர் 1:4**; ஞானத்தையும் உணர்வையும் அருளுகிறவர் **ஏசா.11:2**, **எபே.1:17**; சத்திய ஆவியானவர் **யோவா.14:17**; கிருபையின் ஆவியானவர் **எபி.10:29**; மகிமையுள்ள ஆவியானவர் **1பேது.4:14**; நமது தேவனுடைய ஆவியானவர் **1 கொரி.4:11**. ஜீவனுள்ள தேவனின் ஆவியானவர் **2 கொரி.3:3**. அவர் நல்ல ஆவியானவர் **நெகே.9:20**; கிறிஸ்துவின் ஆவியானவர் **1பேது.1:11** புத்திரசுவிகாரத்தை அளிப்பவர் **ரோமர் 8:15**; ஜீவனின் ஆவியானவர் **வெளி.11:11**; தமது குமாரனின் ஆவியானவர் **கலா.4:6**.

இத்தகைய தூய ஆவியானவரால் தான் நாம் சுத்திகரிக்கப்படுகிறோம் **2 தெச.2:13**. நித்திய ஆவியானவராகிய அவரால் கிறிஸ்து நம்மைப் பழுதற்றவராக தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார் **எபி.9:14**. இந்த ஆவியானவர் மீட்கப்படும் நாளுக்கென்று நம்மை முத்திரித்திருக்கிறார் **எபேசி.4:30**. நம்மை வாழிடமாக்கியவர் அவரே **எபேசி.2:22**; அவர் நம்மில் வாசம்பண்ணுகிறவர் **2 தீமோ.1:14**; நம்பிக்கையில் பெருகச் செய்கிறவர் **ரோமர் 15:13**.

இந்தப் பரமவிருந்தாளி நம்மில் பிரகாசிக்க அல்லது அவர் நம்மில் நிரப்பப்பட நமது வாழ்வு பரிசுத்தமாயிருப்பது அவசியம். அவரை அன்புடன் வரவேற்போம். அவரைத் தடுப்பதோ, துக்கப்படுத்துவதோ அணைத்துப் போடுவதோ கூடாது. மாறாக அவரை நேசிப்போம். அவரது அன்பில் களிகூருவோம். அப்போது நாம் ஆவியில் பிழைத்திருப்பவர்களாயிருப்போம் **கலா.5:25**; ஆவிக்கேற்றபடி நடந்து கொள்வோம் **கலா.5:16**; ஆவியில் ஜெபிப்போம் **யூதா.20**. கிறிஸ்து நமக்காக கிரியை செய்வதையும், ஆவியானவர் நம்மில் கிரியை செய்வதையும் கண்டு கொள்வோம். யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுவோம். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே **எபி.12:14**. ஆவியில் ஐக்கியமும் **பிலி.2:1**, பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் **2கொரி.13:14**. இருதயத்தில் காத்துக் கொள்ளப்படும்.

கிறிஸ்துவும் ஆவியானவரும் நம்மில் வாழும் வாழ்வு குறிப்பிடத்தக்கதாகும். இதனால் இரட்டை வெளிப்பாடு ஏற்படுகிறது. ஒருபுறம் கிறிஸ்து நம்மிலும் **கொலோ.1:27**, இன்னொருபுறம் நாம் கிறிஸ்துவிலும் **2கொரி.5:17**; **கலா.2:20** வாழும் அனுபவம் இது. ஒருபுறமாகதூய ஆவியானவர் நம்மிலும், **ரோமர் 8:9**, மறுபுறமாக நாம் தூய ஆவியானவரிலும் **கலா.2:20** வாழும் அனுபவமாகும். "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனில் தேவன் நிலைத்திருக்கிறார்; அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்" **1 யோவா.4:15**.

ஒருமைப்பாட்டின் நெருக்கம் இங்கு வெளிப்படுகிறது. அப்படியானால் நாம் நம்மைப் பரிசுத்தத்துக்கு ஒப்புக் கொடுக்கவும், செயல்படுவதற்குரிய தேவைகளால் நிரப்பப்படுவதும் அவசியம். இவ்வாறு வல்லமையும் ஜீவனும் நிரம்பிய நமது பொறுப்புகள் என்ன? பரிசுத்த நடக்கையும், தேவபக்தியுமுடையவர்களாயிருக்க வேண்டுமே **1 யோவா.3:11**. "தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியும் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" **1 பேது.2:9**. மேலும் நற்கிரியைகள் செய்கிறவர்களாகவும் **தீத்து.2:14**, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் பெற்றுக் கொள்ளுகிறவர்களுமாயிருப்பீர்கள் **ரோமர்.2:7**.

ஆவியானவர் எப்படிப்பட்டவர் என்பதையும், தமது பக்தர்களின் இருதயத்தில் எவ்வாறு அன்பு, வல்லமை ஆகியவற்றின் பிரளயமாய் செயல்படுகிறார் என்பதையும் நாம் கற்றுக் கொள்ளாவிடில், நமது துன்ப வேளைகளிலும், எதிரிகள் முன்பாகவும் வல்லமையற்றவர்களாகவும், வெட்கப்பட்டவர்களாகவும் நிற்க ஏதுவாகும்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

"அப்படியே ராஜா இறந்த பின்பு, சமாரியாவுக்குக் கொண்டு வரப் பட்டான்; ராஜாவை சமாரியாவில் அடக்கம் பண்ணினார்கள்" என்று மகா பரிதாபமாய் அந்த வேத பகுதி முடிகிறது 1 இராஜா. 22:37.

புதிய ஏற்பாடு

அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப் படுத்தா மலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார் கள்; **உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.**

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடோருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, **தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார்.**

இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்; அந்தபடியே அவர்களு டைய பெண்கள் சுபாவ அநு போகத் தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.

தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால் தகாதவை களைச் செய்யும்படி, **தேவன் அவர் களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார்** ரோமர் 1:21, 24, 26, 28.

I அடியேனுக்கு ஆண்டவருடைய பிள்ளைகளைக் குறித்து சில ஆதங் கங்கள்

1. வருகையின் தூதன் பத்திரிகை யை பிழை திருத்துவதற்காக இன்னொ ருவர் வாசிக்க அடியேன் கவனித்து, முதலாவது ஒரு தடவை பிழை திருத்து கிறேன் (1st Proof) பிழை திருத்திய பின்பு இரண்டாவது தடவை (second proof) முழுவதையும் வாசித்துப் பார்க்கிறேன். இப்படியாக 1969 முதல் மாதந்தோறும், வருடந்தோறும் (month after month, year after year) தூதன் பத்திரிகையை இரு முறை படிக்கிறேன். வேத புத்தகத்திற்கு பிறகு என்னை உயிர்ப்பித்து, ஊழியக் காரனாக மாற்றி னது தேவ கிருபையால் வருகையின் தூதன் பத்திரிகையே!

இப்பத்திரிகைக்காக அதிக வாஞ்சையோடு காத்திருந்து, சிறிது காலதாமதமானாலும் போன் மூலமாக விசாரிக்கிறவர்களும் உண்டு. அதே வேளை அநேகர் தூதனை படிக்க வில்லை என்று அறியமுடிகிறது. தயவு செய்து எல்லா கட்டுரைகளையும் கருத்தாய் படியுங்கள், ஆசீர்வதிக்கப் படுங்கள்.

2. ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பும்போது, சமயத்திற்கு சமயம் (Time to time) நாங்கள் எழுதும் அறிவிப்பு களை தயவுசெய்து கவனியுங்கள். இந்த மாதம் ஒரு அன்புத் தாயார் நம்முடைய பழைய வங்கி பெயருக்கு ஒரு காசோலை யை Varukayin Thoothan A/c.No. ..... என்று அனுப்பியிருந்தார்கள்.

1970-ம் ஆண்டு முதல் மிக நீண்ட காலம் நாம் உபயோகித்த வங்கி எண்ணை உபயோகிக்க முடியாதது துர்பாக்கியமே. அவர்கள் ஏதாவது ஒரு புதுப்புது காரணத்தை சொல்லி இந்தியன் வங்கி வருகையின் தூதன் கணக்கை அடிக்கடி முடக்கிப் போடுகிறார்கள்.. எனவே 2-ம் பக்கத்திலுள்ள வங்கி எண்ணுக்கு பணம் அனுப்ப உங்களை மிகவும் பட்சமாய் கேட்கிறேன்.

3. உங்களில் சிலர் வங்கி வழியாக காணிக்கை அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் வங்கி ஸ்டேட்மென்ட் (State-ment) எடுத்துப்பார்த்தும் எந்த விபரமும் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே வங்கி வழியாக பணம் அனுப்பினால் தயவுசெய்து உடனே விபரத்தை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

II. அடியேனுக்கு கர்த்தர் காண்பித்த தயவு

கர்த்தாவே, அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வள வேனும் பாத்திரன் அல்ல ..... என்றான் ஆதி.32:9-12.

உங்களில் சிலர் திருமணம், குழந்தை, வேலைவாய்ப்பு, குடும்பத் தினரின் மனந்திரும்புதல், வியாதி போன்ற பல காரியங்களில் மிகவும் சோர்ந்து போய் இருக்கலாம். கவனி யுங்கள், "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" என்று கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்ன போது .... எழுபத்தைந்து வயதுள்ளவனா யிருந்தான் ஆதி.12:1-4. "தன் குமார னாகிய ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாம் நூறு வயதுள்ளவனாயிருந்தான் ஆதி.24:5. அதாவது 25 ஆண்டுகள் காத்திருந்த நிலைமை! அதுபோல எங்கள் மகள் திருமணத்திற்காக நாங்களும் 35 ஆண்டுகள் (1985) காத்திருக்க வேண்டிய தாயிற்று, கர்த்தருக்கே மகிமை.

"நெடுங்காலமாய் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும் பினது வரும்போதோ ஜீவ விருட்சம் போல் இருக்கும்" என்று தேவனுடைய வசனம் கூறுகிறது நீதி.13:12.

"கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதா யிருந்து, கர்த்தருக்கே காத்திரு" சங்.27:14.

III. அடியேனுக்கு அன்பின் ஆண்டவர் அழியும் ஆத்துமாக்களைக் குறித்து தந்த தரிசனமும், பாரமும் வேதனையும்

முதலாவது வேறொரு பத்திரிகை யில் படித்த கட்டுரையை கீழே அச்சிடுகிறேன் :

"கான்பரன்ஸ்" என்ற ஆங்கில வார்த்தைக்கு "கருத்தரங்கம்" என தமிழில் அர்த்தம் கொள்ளலாம். இன்றைக்கு அடிக்கடி பேசப்படுகிற ஒரு **"கான்பிரன்ஸ்". "வீடியோ கான்பிரன்ஸ்".** ஒரு பெரிய நிறுவனத்தின் தலைவர், தனது கருத்துக் களை, விருப்பங்களை, உண்மைகளை, ஆலோசனைகளை தூர இடத்தில் இருந்துகொண்டு தனது பணியாளர் களுக்கு, நண்பர்களுக்கு, கணிணி வழியாக பேசுவது, ஆலோசனை அளிப்பது இந்த வீடியோ கான்பரன்ஸ் ஆகும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் தூர இடத்தில் இருக்கும் நமது தலைவர் இயேசு கிறிஸ்துவின் **"கான்பரன்ஸ்"**-ல் அமர்ந்து அவர் பேச்சையும், ஆலோசனை களையும் கேட்டது எப்போது?

நெகேமியா சில நாட்கள் தன் தேவனோடு இத்தகைய தெய்வீக கான்பரன்ஸ்-ல் (Divine conference) இருந்தபடியால்தான் இடிந்து கிடந்த எருசலேமின் சுவர்களை கட்டி முடிக்கத் தேவையான ஆலோசனையும், திட்டத் தையும் சத்துவத்தையும் பெற்றுக் கொள்ள முடிந்தது.

ஏதாவது "நோய்" என்றால் அல்லது "பேய்" என்றால் மட்டுமே ஜெபிக்க வேண்டும் என்கிற மட்ட ரகமான ஆவிக்குரிய நிலை நம் மத்தி யிலிருந்து விலகிட பரிசுத்தாவியானவர் உதவி செய்வாராக.

* * * * *

இரண்டாவது சுமார் 10 வருடங் களுக்கு முன்னால் **"இந்திய இல்லந்தோறும் நற்செய்தி"** பத்திரிகையில் வாசித்த கட்டு ரையை அச்சிடுகிறேன் :

இவ்வாண்டின் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் வருந்தத்தக்கதொரு குறிப்புடன் முடிவுக்கு வந்துள்ளன. கிறிஸ்மஸின் போது கேரளாவிலுள்ளவர்கள் ரூ.85 கோடி மதிப்புள்ள மது அருந்தியுள்ளனர். அதில் கோட்டயத்தில் மட்டும் ரூ.4.5 கோடியளவு மதுவை நான்கு தினங்களில் குடித்திருக்கின்றனர்.

கொச்சி, பம்பாய் & புதுடெல்லி இந்த 3 இடங்களிலும் புத்தாண்டு விழாவில் அநாகரிகமான நிகழ்வுகள் நடந்தன. பெண்கள் தாக்கப்பட்டிருக் கின்றனர். சென்னையில் ஆண்களும் பெண்களும் நட்சத்திர நீச்சல் குளத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த மேடையில் புத்தாண்டை வரவேற்று குடித்து கூத் தாடிக் கொண்டிருந்தபோது, மேடை உடைந்ததில் மூவர் பலியாயினர். அநேகர் படுகாயம் அடைந்தனர். **இது தான் சமீபத்திய கொண்டாட்டத்தின் வரவு செலவு கணக்கு.**

நாம் தொலைக்காட்சியில் காணும் நிகழ்வுகள், செய்தித்தாளில் வாசிக்கும் சம்பவங்கள் **ஆத்துமாவை உறைய வைத்து** சோர்ந்து போகச் செய்கின்றன.

நம்மை சுற்றி நடக்கின்றவை குறித்து நான் அதிர்ச்சி அடையவில்லை. மாறாக இந்த சூழலுக்கு நாம் எப்படி பதிலடி கொடுக்க வேண்டுமென்றுதான் தேவ மக்களை கேட்க விரும்புகிறேன்.

நம்மைச் சுற்றி நடக்கிறவற்றிற் காக கண்ணீர் விட்டு கதறாவிட்டால்,

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

நாம் கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களல்ல. இயேசுவானவர் எருசலேம் நகரத்திற்கு வரப்போகும் அழிவைப் பார்த்தபோது, அவர் நகரத்திற்காய் அழுதார்.

நம்மில் சிலர் ஜெபிப்பதன் மூலம் ஆண்டவரின் உள்ளத்தின் வேதனையை பகிர்ந்து கொள்வதால் நாட்டின் மீது தேவனின் தண்டனை தள்ளி வைக்கப் படலாம்.

நாம் ஜெபிக்கவில்லையென நான் கூறவில்லை. மெய்தான் நாம் விண்ணப்பம் பண்ணுகிறோம். ஆனால் நாம் நம் உள்ளத்தில் வேதனையோடு கெஞ்சுகிறோமா? என்பதே என் கேள்வி. கிறிஸ்து இல்லாமல் சாவை சந்திக்கும் இலட்சக்கணக்கான அழிந்துபோகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரம் நமக்குண்டா?

* * * * *

மூன்றாவது "சீயோனின் சத்தம் ஊழியங்கள்" பத்திரிகையில் அச்சிடப்பட்டதை அப்படியே அச்சிடுகிறேன் :

டிசம்பர் 25

கிறிஸ்துமஸ் தினமானது எப்படி?

கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை உலக கிறிஸ்தவர்களின் கூடுகை - Mass of Christ (Christ-Mass) என்ற வார்த்தையிலிருந்து மருவி வந்ததாகும். இயேசு இந்த நாளில்தான் பிறந்தார் என்று யாராலும் சொல்ல முடியாது. தேவன் வேதத்தில் அதை வெளிப்படுத்த வில்லை. பின் ஏன் டிசம்பர் 25-ஐ நாம் உலக முழுவதும் இயேசு பிறந்த தினமாக கொண்டாடுகிறோம். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, ஆதி திருச்சபைகளின் வேதனைக் காலத்தை முடிவுக்கு கொண்டு வந்த ரோம மன்னரான கான்ஸ்டன்டைன்தான் முதலாவது கிறிஸ்துமஸ் பண்டிகையை கி.பி.336-ல் டிசம்பர் 25-ல் கொண்டாடினார். முற்காலத்தில் பாகால் தேவதையான சூரிய தேவதையின் பண்டிகையை டிசம்பர் 25-ம் தேதி கொண்டாடுவதை நிறுத்தி விட்டு பின்னர் அதே தினத்தில் இயேசு பிறப்பைக் கொண்டாடி தான் கிறிஸ்துவின் மீது வைத்திருந்த பற்றையும், மிகுந்த பக்தியையும் அரச சட்டமாக்கி, அதை வெளிப்படுத்தினார்.

முன்னூறு வருடங்களுக்கு மேலாக ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவம், இந்த மன்னனின் தீவிர பற்றினால் விடுதலை பெற்றது. மன்னனே இயேசுவை ஏற்றுக் கொண்டதால், அநேக ரோமர்களும், கிரேக்கர்களும் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அப்படியென்றால் நாம் கிறிஸ்துமஸ் கொண்டாடக் கூடாதா? என்ற கேள்வி உங்களுக்குள் எழும்புகின்றது அல்லவா? வேதம் நாட்களை விசேஷமாக மாற்றிக் கொள்ளும் அதிகாரத்தை மக்களுக்கு கொடுத்திருக்கின்றது. அன்றியும் ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான். அவனவன் தன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக் கடவன். நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான். நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும், கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான் (ரோமர் 14:5-6).

ரோம மன்னரான கான்ஸ்டன்டைன் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடியதன் நோக்கம், பாகால் தேவதையான சூரிய தேவதை தெய்வம் அல்ல. இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம் என்று அறிவிக்கவே. டிசம்பர் மாதம் என்றால், இயேசு பாவிகளை இரட்சிக்க மணணில் உதித்தார் என்ற நற்செய்தியை அநேகருக்கு அறிவிக்க வேண்டிய மாதம். அதைத்தான் கான்ஸ்டன்டைன் செய்தார். ஆமென்!!

மனந்திரும்புகிற ஒரே பாவியினி மித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன் (லூக்.15:7). இயேசு பிறப்பின் செய்தியை பிறருக்கு அறிவித்து, ஏழை மக்களுக்கு உதவி, பின்னர் புத்தாடை அணிந்து, மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதே உணமையான கிறிஸ்துமஸ்.

நன்றி : சீயோனின் சத்தம் ஊழியங்கள்
நவம்-டிசம். 2019

* * * * *

நான்காவதாக, "ஜாமக்காரன்" பத்திரிகையில் அச்சிடப்பட்டிருந்ததை அப்படியே அச்சிடுகிறேன் :

யார் இந்த கிறிஸ்மஸ் தாத்தா?

கிறிஸ்மஸ் தாத்தா என்பது யார்? கிறிஸ்துவின் பிறப்பிற்கும் இவருக்கும் என்ன தொடர்பு? கிறிஸ்து இல்லாமல் கொண்டாடிவிடுவார்கள். ஆனால் கிறிஸ்மஸ் தாத்தா இல்லாவிட்டால் திண்டாடி விடுவார்கள். உலக வழிகளின் மாயையான தோற்றங்களை மனதில் புகுத்தி ஆவிக்குரிய வாழ்க்கையிலோ இறந்து போனவர்களாகவே நம் சபை கிறிஸ்தவர்கள் காணப்படுகிறார்கள். இயேசுவின் பிறந்த நாளை சரீரத்தில் கொண்டாடும் மக்கள்தான் இன்று அதிகம். பிசாசின் தந்திரத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டுமே. நிகழ்ச்சியில் அனைவரின் கவனத்தையும் கிறிஸ்மஸ் தாத்தாவே ஈர்த்துக்கொள்ளும் போது இயேசுவுக்கு இடம் எங்கே? அப்போஸ்தலர்களோ இயேசுவின் பிறந்த நாளை கொண்டாடியதாக வேதம் போதிக்கவில்லையே.

அப்படியே கிறிஸ்துமஸ் தாத்தாவின் வேடமும் வேதத்தில் இல்லையே. சந்ததி சந்ததியாய் சபையில் தொடர்வது தானே என்பதற்காக சத்துருவிற்கு சாதகமாகிவிடலாமோ! உங்கள் பாரம் பரியங்களினாலேயே கிறிஸ்துவின் கட்டளைகளை அவமாக்குகிறீர்கள் என்றார் இயேசு. சில கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளில் தாத்தா எப்போ வந்தீங்க, பாட்டி எப்படி இருக்காங்க போன்ற கிண்டலான கேள்விகள் கேட்கப்பட்டு கூட்டங்களை கூத்தாட செய்வதும் கிறிஸ்தவர்களுக்கு பொருத்தமானதோ? ஜனங்களின் முகத்தை மறைமுகமாக கிறிஸ்துமஸ் தாத்தாவான தன்னை நோக்கி திருப்புவதே சத்துருவின் நோக்கம். சாதகமாக ஒன்றை காட்டி விட்டு சத்தியத்தை காணாதபடி கண்களை கட்டிபோடுவது பிசாசின் தந்திரம். மேலும் உலகத்திற்கு ஒத்த வேஷத்தையும், உன்னுடைய வேஷந் தான் என்று ஒத்துக்கொள்ள செய்து விடுவான். இதனையே இன்றைய நாட்களில் கிறிஸ்மஸ் தாத்தா வேடங்கள் வெளிப்படுத்துகின்றன.

4-ம் நூற்றாண்டில் துருக்கியில் சிமிர்னாவில் பேராயராக இருந்தவர் செயிண்ட் நிக்கோலஸ். பெரும் செல்வந்தராகவும், அத்துடன் குழந்தைகளுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்தவராகவும் இருந்ததால் ரோமன் கத்தோலிக்க அமைப்பினர் அவரை நினைவு கூருவதை வழக்கப்படுத்தினார்கள். இங்கிலாந்து தேசத்தினர் அவரை Father of Christmas என்று அழைத்தனர். விளைவு, உலகத்தின் இரட்சகராக ஈவாகவும் பரிசாகவும் கொடுக்கப்பட்ட இயேசுவின் மேல் இருந்த கவனத்தை பரிசு கொடுக்கும் கிறிஸ்மஸ் தாத்தாவின் மீது திருப்பி விட்டனர். ஜனங்களின் விருப்பமும் புத்தாடை, பரிசு, பலகாரம் என்று மாறிப் போனது. ஆத்துமாவுக்கான பரிசைவிட சரீரத்துக்கான பரிசுகளே சிறப்பாக தெரிந்தது. ஜனங்களும் அவரது இரக்க குணத்தை ஆண்டு தோறும் நினைவுகூர தொடங்கி, எதிரியுடன் கலந்து கிடங்கிற்குள் கிறிஸ்தவர்கள் விழுந்து கிடப்பது பரிதாபமானது. புனிதர் என்ற பட்டத்துடன் அவரை (St.நிக்கோலசை) புகழ்பாட தொடங்கினார்கள். அவரையே, ஆராதனைக் குரியவராக மாற்றினதினால் அவரது உருவம் விக்கிரகமானது. தியானாளின் கோவிலில் பொம்மையின் மாதிரிகள் விற்கப்பட்டது போல (அப்.19:24) அவரை போன்ற தோற்ற முடைய வேடம் வியாபாரமாக மாறிப்போனது. ஜனங்களின் பார்வை வேறு பக்கமாக திரும்பிய போது பிசாசு உள்ளே நுழைவதும் மக்களை வேறு வழியில் கூட்டி செல்வதும் பிசாசுக்கு எளிதாகி போனது.

கிறிஸ்து பிறப்பினை மறந்து St. Nicholas Day என்றே ஜனங்கள் கொண்டாடவும் தொடங்கினர். இது ஒருபுறம் இருக்க,

(தோர்) என்ற ஜெர்மானிய கடவுளை கொம்புகள் உள்ள இரண்டு மான்கள் ஆகாயத்தில் தேரில் இழுத்து செல்வதை போன்று உருவகப்படுத்தப் பட்ட ஜெர்மானிய புராணங்கள் கூறும் கதையே கிறிஸ்மஸ் தாத்தா என்ற வடிவிலும் யூல் என்ற ஜெர்மானியர் களின் பண்டிகை என்ற வடிவிலும் கிறிஸ்மஸ் கிறிஸ்துவத்துடன் கலந்து விட்டது கவலைக்குரியது! மான் கொம்பு களை வீட்டுசுவர்களில் அலங்காரமாக மாட்டிவைக்கும் வழக்கம் டோர் என்ற

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

தெய்வத்தை வணங்கியவர்களால் தொடங்கப்பட்டதே. நீண்ட தாடி, தொப்பி, அங்கி, நிலாவை நோக்கி ஆகாயத்தில் மான்கள் பாய்ந்து செல்லும் காட்சியும் பாபிலோனியர்களால் வணங்கி வந்த நிம்ரோத்தையும் நிலவு தெய்வத்தையும் தோர் என்ற தெய் வத்தையும் மையப்படுத்தி வடிவமைக் கப்பட்டவைகளே. அத்துடன் **பாபிலோ னியர்களின் சூரிய கடவுளின் பிறந்த நாளாக கருதப்படும் டிசம்பர் 25-ம் தேதியினையே கிறிஸ்து பிறப்பின் தினமாகவும் கொண் டாடும்படி கிறிஸ்தவம் பணிக்கப்பட்டது. எத்தனை பொிதான கலப்படம்.**

பிரியமானவர்களே! லாபானு டைய வீட்டைவிட்டு யாக்கோபு ஓடிப் போகிறபோது லாபான் யாக்கோபை நோக்கி : என் தெய்வங்களை ஏன் திருடி கொண்டு போகிறாய்? என்று கேட்டதை போல கிறிஸ்மஸ் தாத்தாவின் வெவ் வேறு உருவங்களையும் படங்களையும் வைத்து இதே கேள்வியை கேட்கும் காலம் தூரத்தில் இல்லை. புறஜாதி களுடைய மார்க்கத்தை கற்றுக் கொள் ளாதீர்கள் (எரே.10:2) ஆராதனைக்குரிய வைகளில் அறியாமல் ஆராதிக்கிறவை களை அகற்றிவிடுவோம் அப்.17:23. தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங் களுக்கும் சம்பந்தம் ஏது? (2 கொரி.6:16) வீணானவைகளை பின்பற்றினால் நம்மையும் அது வீணராகவே மாற்றி விடும் (2 இராஜ 17:15) ஜாக்கிரதை.

நன்றி : ஜாமக்காரன்
ஜனவரி 2017

* * * * *

ஜந்தாவது "ஜாமக்காரன்" பத்திரிகை யில் அச்சிடப்பட்டிருந்ததை அப்படியே அச்சிடுகிறேன் :

இயேசு மரித்து உயிர்த்தெழுந்து பரமேறி சென்றபின்தான் புதிய ஏற்பாட்டு சபை ஆரம்பிக்கிறது. புதிய ஏற்பாட்டு சபையில் எந்த சீஷனும் அல்லது எந்த சபையும் 40 நாள் அல்லது 30 நாள் உபவாச ஜெபம் செய்ததாக நாம் வேதத்தில் எங்கும் வாசிக்க முடியாது. இன்றைய கிறிஸ்தவர்கள் மார்டின் லூத்தர் காலத்துக்கு பின் உருவாகிய புரோடஸ்டன் சபையாக ஆராதிக்க தொடங்கிய பின்னும் கத்தோலிக்க சபையின் பாரம்பரிய சடங்குகளை தொடர்ந்து இன்றுவரை கைகொண்டு வருகிறார்கள். குறிப்பாக இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட "பொிய வெள்ளி" (Good Friday) கிழமைக்கு முன் 40 நாட்கள் லெந்து நாட்கள் அல்லது ஒடுக்க நாட்கள் என்று கூறி சாம்பல் புதன் கிழமையிலிருந்து பொிய வெள்ளி கிழமை வரை 40 நாட்கள் ஒடுக்க நாட்களாக அனுஷ்டிக்கிறார்கள். CSI, லூத்தரன், மார்தோமா போன்ற மெயின் லைன் சபைகள் மாத்திரம் இந்த 40 நாட்களும் நோன்பு நாட்களாக அனுஷ்டிக்கிறார்கள். இது புதிய ஏற்பாட்டு சபைக்கு கற்பிக்கப்பட்ட உபதேசமல்ல.

குறிப்பிட்ட அந்த லெந்து கால 40 நாட்களில் பெரும்பாலான கிறிஸ்த வர்களின் வீட்டில் இறைச்சி, மீன் போன்ற அசைவ ஆகாரங்கள் சாப்பிடா மல் இருப்பார்கள். பெரும்பாலானவர் கள் இந்த 40 நாட்களில் காலை ஆகாரத்தை மட்டும் சாப்பிடாமல் இருந்து அதை ஒருசந்தி என்பார்கள். தமிழ்நாட்டில் சிலர் தலைக்கு பூ வைக்க மாட்டார்கள். முகத்துக்கு பவுடர் போட மாட்டார்கள். வேறு எந்த அலங்காரமும் செய்யமாட்டார்கள்.

இவைகளெல்லாம் புறம்பான ஒடுக்கங்கள் ஆகும். கர்த்தர் இவைகளை வெறுக்கிறார். அதனால்தான் யோவேல் தீர்க்கதரிசி மூலமாய் கர்த்தர் கூறுகிற தாவது உங்கள் வஸ்திரங்களை அல்ல உங்கள் இருதயத்தையே கிழித்து போடுங்கள் என்கிறார்.

ஆகவே நாம் சரிப்படுத்த வேண்டியது உங்கள் ஜீவியத்தை என்று கர்த்தர் கூறுகிறார். நீங்கள் இறைச்சி மீன் சாப்பிடாமல் அல்லது தலைக்கு பூ வைக்காதிருந்ததால் ஒரு ஆசீர்வாதமும் பெற்றுக் கொள்ளப்போவதில்லை. இது புறம்பான ஒடுக்கம், சரிப்படுத்த வேண்டியது உன் இருதயம் ஆகும்.

இயேசு மத்.6:17-ல் கூறுவதை கவனியுங்கள். நீ உபவாசிக்கும் போது தலைக்கு எண்ணெய் பூசி, முகம் கழுவி என்று ஒருவிதமான மேக்கப்பையே கூறுகிறார். காரணம் மற்றவர் பார் வைக்கு நீங்கள் சாப்பிடாமல் இருப்ப தால் முகம் வாடலாய் காணப்படும். அது உன்னை காட்டிக் கொடுத்துவிடும். அதனால் ஏன் முகம் வாடலாக இருக்கிறது சாப்பிடவில்லையா என்று மற்றவர்கள் கேட்க நேரிடும். நீங்கள் சாப்பிடவில்லையா? என்று கேட்டால் நீ பொய் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். ஒருவேளை நான் இன்று உபவாசம் என்று கூறினால் அது உன்னை பெருமைப்படுத்தும். நீ மிகவும் ஆழமான பக்தியானவர் என்று உன்னை பறை சாற்றும்.

நன்றி : ஜாமக்காரன்
ஜூலை 2020

* * * * *

பண்டிகைகக் கொண்டாடுவதால் உண்டாகும் தீமைகள்

1. மக்கள் சாரை சாரையாக 'நல்ல பெருமாள்', 'போத்தீஸ்' போன்ற ஜவுளி கடைகளுக்கு படையெடுப்பு.
2. நான் வாலிபனாயிருக்கும் போது, தீபாவளிக்கு அவர்கள் 100 டியூப் லைட் கட்டினால், கிறிஸ்மஸ் பண்டிகைக்கு போட்டி போட்டு 200 டியூப் லைட் கட்டினதை அடியேன் அறிவேன்.

   இப்போது எந்த சர்ச் அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது என்று வாட்ஸ் அப் மூலமாக போட்டியே நடக்கிறது. இதற்கு ஆவிக்குரிய சபைகளும் விதிவிலக்கல்ல.
3. பட்டாசுகளுக்காக கிறிஸ்தவர்களின் பணங்கள் கோடி கோடியாக சிவகாசி போன்ற இடங்களிலுள்ள புறஜாதியார் கைகளை சென்றடைகிறது.
4. பண்டிகையை முன்னிட்டு சில நாட்கள் இறைச்சி கடைகளில் கிறிஸ்தவர்களின் கூட்டம் அலை மோதுகிறது.
5. கிறிஸ்து பிறப்பு பண்டிகையை முன்னிட்டு, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இத்தனை ஆயிரம் கோடி அளவில் அதிக மதுபானம் விற்பனை யாயிற்று என்ற பத்திரிகை ரிப்போர்ட்.

அடியேன் இவைகளை எழுதக் காரணம்:

1. எனது பூட்டா தாத்தா பெயர் **பழனிவேல்** என்ற **சாமுவேல்.** அவரு டைய மகன் **சாலமோன்** என்ற உபதேசியார். அவருடைய மகன்தான் காலஞ்சென்ற எனது தகப்பனார் பாஸ்டர் **S. தேவதாசன்.**

   எனது மூத்த சகோதரி (வயது 92) ஒரு தடவை என்னைப்பார்த்து, தம்பி மிஷனெரிமார் வந்து சுவிசேஷத்தை அறிவித்திருக்காவிட்டால் நாமும் விக்கிரகங்களைத்தான் வணங்கிக் கொண்டிருப்போம் என்றார்கள்.
2. ஒரு மிஷனெரி ஊழியத்தின் கண் காணி, மார்ட்டின் லுத்தர் எழும்பியிரா விட்டால் நாமும் மரியாளைத்தான் வணங்கிக் கொண்டி ருப்போம் என்று எழுதியிருந்தார்கள்.
3. பொதுவாக ஆவிக்குரிய தலைவர்கள், இன்னுமொரு மார்ட்டின் லுத்தர் எழும்பவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், நாம்தான் மனந்திரும்ப வேண்டும். மக்கள் கோடி கோடியாக சத்தியத்தை அறியாமல் நித்தியத்திற்குள் பிரவேசிக் கும் போது, **ஜீவனுள்ள தேவனுடைய ஆலயத்தின் மணியை அடிப்பது யார்?**

ஒரு தேவ ஊழியரின் சாட்சி :

நரக கொடு பாதனைம்

அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக் குட்டியானவரின் பரிசுத்த இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்ட தேவ மக்களுக்கு முடிவில்லாத நித்தியமான சூரிய அஸ்தமனமே இல்லாத ஒளிமய மான பகற்காலமாகும்.

மனந்திரும்பாத, பாவத்தில் வாழ்ந்து, பாவத்தில் மரிக்கின்ற தேவனற்ற மாந்தருக்கு முடிவில்லாத நித்தியமானது எக்காலத்துக்கும் சூரிய உதயத்தை (அருணோதயத்தை) காணாத காரிருளின் காலமாகும்.

தேவனுடைய தேவ கோபாக் கினையை குறித்து பேசும் போது அதற்கு முழுமையாக சம்பந்தப்பட்ட எரிநரகத் தை குறித்து பேசாமல் இருப்பது கூடாத காரியமாகும். பிரசங்க பீடங்களிலிருந்து "எரிநரகத்தை" குறித்து அதிகமான பிரசங்கங்கள் இந்த நாட்களில் பிரசங்கிக் கப்படுவதே இல்லை. பிரசங்கிமார்கள் அந்த "நரகம்" என்ற பொருளில் தங்கள் வாழ்நாட் காலம் முழுவதிலும் ஒரு தடவை கூட பேசுவது என்பது மிகவும் அரிதாகும். ஆனால் ஆண்டவருடைய

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

பரிசுத்த வேதாகமம் முழுவதும் நரகத்தை குறித்த எச்சரிப்பின் சத்தத்தால் நிரம்பி வழிகின்றது.

எனது தேவ ஊழியத்தின் ஆரம்ப கால நாட்களில் நான் ஒரு இளம் குருவானவராக ஒரு சபையில் தேவ ஊழியம் செய்து கொண்டிருந்தேன். நரகத்தை குறித்து சபை மக்களை எச்சரித்து பிரசங்கித்தால் அவர்கள் தடுமாற்றம் அடைந்து விடுவார்கள் என்று பயந்து நான் அந்த நாட்களில் அதை குறித்து பேசுவது கிடையாது.

அப்படிப்பட்ட கால கட்டத்திலே தேவன் ஒரு நாள் எனக்கு ஒரு தரிசனத்தை தந்தார். எனது முழு வாழ்க்கையிலும் நான் அந்த ஒரு தரிசனத்தைத்தான் கண்டிருக்கிறேன். என்னுடைய அந்த தரிசனத்தில் மக்கள் நரகத்திற்குள் விழுந்து கொண்டிருப்பதை தேவன் எனக்கு காண்பித்தார். அந்த நாளிலிருந்து நான் நரகத்தை குறித்து மிகவும் விழிப்படைய ஆரம்பித்து நரகத்தை குறித்து திட்டமும் தெளிவுமாக பேசி வருகின்றேன்.

நான் எனது தரிசனத்தில் லண்டன் மாநகரத்தின் ஜனப்பெருக்கமான ஒரு பிரதான வீதியில் மக்களோடு மக்களாக நடந்து சென்று கொண்டிருந்தேன். ஜனங்கள் தங்கள் தங்கள் வேலைகளுக்கும் இதர காரியங்களுக்கும் ஒருவரையொருவர் நெருக்கி முண்டியடித்துக்கொண்டு சென்று கொண்டிருக்கும் ஒரு வேளையாக அது இருந்தது. மக்கள் ஒருவரையொருவர் நெருக்கி முன்னேறிக் கொண்டிருந்த வேளையில் அந்த பிரதான வீதியின் ஓரமாக ஒரு மனிதன் தனது கரத்தில் ஒரு சிகப்பு விளக்கை கையில் ஏந்தியவனாக "ஜனங்களே, பின் நோக்கி செல்லுங்கள், ஜனங்களே பின் நோக்கி செல்லுங்கள்" என்று சத்தமிட்டு கூக்குரலிட்டு எச்சரிக்கை செய்து கொண்டிருப்பதை கண்டேன்.

அந்த சமயம் பரிசுத்த ஆவியானவர் என்னை அப்படியே அந்த ஜனக்கூட்டத்திற்கு மேலாக தூக்கி எடுத்து அந்த மனிதன் "ஜனங்களே பின்நோக்கி செல்லுங்கள், ஜனங்களே பின்நோக்கி செல்லுங்கள்" என்று எச்சரிக்கை குரல் எழுப்புவதன் காரணத்தை நான் கண்டு கொள்ளும் படியாக செய்தார்.

அந்த பிரதான பெரும் பாதையில் சென்று கொண்டிருக்கும் மக்கள் ஒவ்வொருவராக குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வரவும் அதற்கு மேல் செல்ல பாதை இல்லாமல் அவ்விடத்திலிருந்து அதல பாதாளத்திற்குள் விழுவதை நான் கண்டு பெரும் பீதி அடைந்தேன். தங்களுக்கு முன்பாக மக்கள் பின்நோக்கி செல்ல விரும்பி பின்நோக்கி செல்ல தங்கள் முழுபெலத்தால் போராடி கூட்டத்தை விலக்கி கொண்டு முன்னேற விரும்பினாலும் அவர்கள் பின்னால் நெருக்கி வந்து கொண்டிருக்கும் மக்கள் அவர்கள் திரும்பி போக முடியாதவாறு நெருக்கிக் கெடுபாதாளத்திற்குள் தள்ளுவதை நான் கண்டு நடு நடுங்கிப் போனேன். அந்த மக்கள் ஒவ்வொருவராக அலறிக் கொண்டு முடிவில்லாத நித்தியத்திற்குள் விழுவதை திகைப்போடு கவனித்தேன்.

முடிவில்லாத நித்தியத்தின் கெடு பாதாள பள்ளத்தாக்குக்குள் விழுந்து கொண்டிருந்த அந்த மாந்தர் எழுப்பிய அலறல், அங்கலாய்ப்பின் குரலானது அந்த நாளிலிருந்து என் உள்ளத்தில் அடிக்கடி தொனித்து என்னைச் சஞ்சலப்படுத்துவதாக இருப்பதால் நான் செல்லும் இடங்களில் எல்லாம் நரகத்தை குறித்து எச்சரித்து பிரசங்கித்து வருகின்றேன்.

இந்த கிருபையின் காலத்தில் மக்கள் ஞானமடைந்து இயேசு இரட்சகரில் அடைக்கலம் புகுந்து கொள்ள நான் மக்களை கெஞ்சி மன்றாடுகிறேன்.

இதை வாசிக்கும் நீங்களும் ஒருக்கால் ஆண்டவர் இயேசுவை ஏற்று மனந்திருப்பாமல் இதுவரை பாவத்தில் ஜீவித்து வந்திருந்தால் இன்றே அவரை அண்டிக்கொள்ளுங்கள். தாமதித்தால் உங்களுடைய காலதாமதம், நீங்கள் கெடு பாதாளத்தில் விழாமல் தப்பிக் கொள்ளும்படியாக கடைசி நேரத்தில் நீங்கள் பின்நோக்கி திரும்பினாலும் நீங்கள் தப்பிக்கொள்ள முடியாமல் கூட்டமானது உங்களை நெருக்கி நரக பாதாளத்தில் தள்ளிப்போடும் என்பதை கண்ணீரோடு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

சாத்தானின் சதி ஆலோசனைகள் யாவும் ஒரே ஒரு குறிக்கோளை மட்டுமே உடையது. ஆம். உன்னை நித்திய அக்கினிக்கு கொண்டு செல்லும்படியாக உன்னுடைய மரண நாள் மட்டும் உனக்கு தந்திர வலை வீசும் தந்திரவான் அவன். எனவே ஒவ்வொரு விநாடியும் உனக்காக இரத்தம் சிந்தி நித்திய பரலோகத்திற்கு அழைத்து செல்லும் உன் அன்பரின் பாத சுவட்டிலேயே நட. உன்னோடு இடைவிடாது பேசும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய சத்தத்திற்கு கீழ்படி, நீ பரலோக இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளலாம்.

* * * * *

ஸ்காட்லாந்து தேசத்தை இரத்த மேரி ராணி ஆட்சி செய்தபோது, ஜான் நாக்ஸ் என்ற பக்தன் "**ஆண்டவரே, ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும், இல்லாவிட்டால் நான் மரிக்கட்டும்**" LORD give me Scotland else I die என்று கதறினாரே! ***இந்தியாவை எனக்குத் தாரும் இல்லாவிட்டால் நான் மரிக்கட்டும் என்று கதறுவது யாரோ!***

புகழும் வேண்டாமே
பெயரும் வேண்டாமே
ஆத்துமாக்களை தாருமே
இந்தியாவை தாருமே
கோடி கோடி மக்களுண்டு
இந்த தேசம் இயேசுவை காணட்டும்

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
சமயம் : 10-01; 02-06

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

கடைசியாக வந்த வாசகர் கடிதம்

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

இத்துடன் சந்தா/காணிக்கையாக ரூ. 1000-க்கான காசோலை எண் 002295 Indian Bank நாள் 17.11.2020 இணைத்துள்ளேன்.

ஜெப விண்ணப்பம்

மகளுக்கு திருமணமாகி 8 ½ ஆண்டுகள் மகனுக்கு திருமணமாகி 6 ½ ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னமும் இரண்டு குடும்பங்களுக்கும் கர்ப்பத்தின் கனி அருளப்படவில்லை. தயவுசெய்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சென்னை
17.11.2020

அன்புடன்
K.J., (CN 00200 S)

நாம் நமது சுய சந்தோஷத்திற்காகவோ, சொகுசான வாழ்வுக்காகவோ ஆவியான வரைத் தேடினால் பெற்றுக் கொள்ள மாட்டோம்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

ஒரு சரீரத்திற்கு **உயிர்** எத்தனை முக்கியம் வாய்ந்ததோ அது போலவே ஆவிக்குரிய வாழ்வில் தனிநபர்களுக்கு **ஆவியானவர்** தேவை.

மாம்சம் எழும்பி செயல்படுவதற்கும், அது நம்மை ஆண்டுகொள்வதற்கும் மாற்று மருந்து **ஆவியானவர்** மட்டுமே.

ஆவியானவர் துக்கப்படுத்தப்படவோ, தடுக்கப்படவோ, அணைக்கப்படவோ நேரிட்டால் அது **கடினமான** அனுபவமாயிருக்கும்.

தூய **ஆவியானவருக்கு** எதிராக பாவம் நிற்க முடியாது. சூரியனது காலை ஒளிக் கதிர்களால் உலகின் இருள் மறைவதுபோல் **பாவம்** மறைந்துவிடும்.

வேதவசனத்தோடுள்ள நெருங்கிய உறவால் மட்டுமே **ஆவியானவரின்** மெல்லிய **குரலைக்** கேட்க முடியும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason